# தவக்காலத்தின் ஐந்தாம் வாரம்

திருவழிப்பாட்டு ஆண்டு A (06-04-2014)

## திருப்பலி முன்னுரை

**இறை இயேசுவில் அன்புநிறை இறைமக்களே தவக்காலம் ஐந்தாம் ஞாயிறு திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் உங்கள் அனைவருக்கும் என் கனிவான வாழ்த்துக்களை உரியதாக்குகிறேன். தவக்காலத்தின் ஐந்தாம் வாரம் நமக்காகத் துன்பங்களை ஏற்ற திருமகன் இயேசு: இறைத் தந்தையால் நமக்காக அனுப்பப்பட்ட துன்புறும் ஊழியன் ஆவார் என உணர்த்தப்பட்டு, அவர் வழியில் சென்று: இவ்வுலகத்திற்கு மரித்தவர்களாகவும், புதுவாழ்வுக்கு உயிர்த்தவர்களாகவும் வாழ முயல்வோம். இந்தப் புது வாழ்வு மதிப்பும் மாட்சிமையும் உள்ளது என்று கண்டுணர்ந்து இயேசுவோடு ஒன்றாவோம்.**

**தவக்காலத்தின் முதலாம் வாரம் பாலை வனத்திற்கு இயேசுவோடு சென்றோம்.**

**இரண்டாம் வாரம் மலை உச்சிக்குச் சென்றோம்.**

**மூனறாம் வாரம் தண்ணீர் உள்ள கிணற்றுக்குச் சென்றோம்.**

**நான்காம் வாரம் இருள் அடர்ந்த இடத்திற்கு இயேசுவோடு சென்றோம்.**

**ஐந்தாம் வாரமாகிய இன்று இயேசுவோடு இலாசரின் கல்லறைக்குச் செல்வோம்.**

**இறந்தவர் மீண்டும் உயிர் பெற்று எழுவது நடைபெற இயலாதது. ஆனால் கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. நம்மைப் படைத்தவரும், காப்பவரும், மீட்பவரும் அவரே. நமக்குள் மீண்டும் அருள்வாழ்வை உயிரோட்டமுடன் மலரச் செய்திட வல்லவரான இறைவனை நாடி வருவோம். திருப்பலியில் அவரன்பில் இணைவோம்:**

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**அன்புத் தந்தையே இறைவா!**

உமது திருச்சபைக்கு நீர் அளித்திருக்கின்ற இந்தத் தவக்காலத்திற்காக உம்மை நன்றியுடன் புகழ்கின்றோம். திருச்சபையின் விண்ணகம் நோக்கிய திருப்பயணத்தில் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவு நிலையினர் அனைவரும் தங்களின் சொல்லிலும் செயலிலும் உமது புனித்தத்தைப் பிரதிபலித்து வாழ்ந்திடவும், அனைவருக்கும் மேன்மையான வழிகாட்டுதல் தந்திடவும் அருள்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நான் உன்னை மறக்கவே மாட்டேன் என்ற தந்தையே!**

சிற்றின்பமான உல்லாசமான வாழ்கையில் தங்களின் ஆற்றலையும், திறமைகளையும் வீணாக்குகின்ற இளைஞர்கள் இயேசுவின் அன்பினால் ஈர்க்கப்படவும், தங்களின் வாழ்வை புனிதமான வழிகளில் நடத்தவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்புத் தந்தையே இறைவா!**

நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அவர்கள் இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பின் நாள் என்னும் இறைவெளிப்பாட்டை தம் உள்ளத்தில் ஆழமாகப் பதித்து: இக்காலத்தை உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும் உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**விடுதலையின் தெய்வமே இறைவா!**

இன்றைய குடும்பங்களில் உண்மையான அன்பு நிலவிடவும், உறவுகளைச் சிதைக்கின்ற சுயநலம், பொருளாசை இவை மறைந்து தியாக மனம் உருவாகிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

இத்தவ நாட்களிலே எமக்கு நீர் தந்திருக்கும் உமது செய்தியையும், விருப்பத்தையும், சித்தத்தையும், வழிகாட்டுதல்களையும் நாம் சரியான விதத்திலே புரிந்துகொண்டு உம்மோடும், எம் உறவுகளோடும் ஒப்புரவாகி, பகைமைகளை விட்டுவிட்டு மனமாற்றமடைந்து உமது விருப்பப்படி நடக்க வேண்டிய ஞானத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**

தொலைத் தொடர்பு ஊடகங்கள், தவறான விளம்பரங்கள், பண்பாட்டுச் சிதைவுகள் இவற்றின் மத்தியில் எங்கள் இளைஞர்கள், இளம் பெண்கள் பாவச் சோதனைகளுக்கு உடன்படாமல் உமது வார்த்தையின் வழிநடந்து வெற்றி வாழ்வைக் கண்டிட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.